## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,
மாவட்ட நீதிபதி

**2025–ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 25–ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆடித் திங்கள் 09–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.257/2018 –ல்**

**இடைநிலை மனு எண்.1/2023**

**1.S.S.இளங்கோவன்**
**2.கார்த்திகா**
**3.மாரியம்மாள்** ... **மனுதாரர்கள்/1,3,4–ஆம் பிரதிவாதிகள்.**

**–எதிர்–**

**1.P.கண்மணி**
**2.P.ரவிசங்கர்** ... **எதிர்மனுதாரர்கள்/ 1,2–ஆம் வாதிகள்.**

இந்த மனு 07.07.2025-ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு. M. ஜெகநாதன்** அவர்களும் எதிர்மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு. R. திருநாவுகரசு** அவர்களும் தோன்றி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையில் இருந்துவந்த இந்த மனுவில் இன்று இந்த நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கிறது.

### ஆணையுரை

வழக்கை தள்ளுபடி செய்யக் கோரி உரிமையியல் நடைமுறை தொகுப்புச் சட்டத்தின் **151**-ஆம் பிரிவின்கீழ் மனுதாரர்கள்/1,3,4-ஆம் பிரதிவாதிகளால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்**

01. 01-ஆம் மனுதாரர் முதலேற்பு வழக்கில் 01-ஆம் பிரதிவாதி ஆவார். 02-ஆம் மனுதாரர் முதலேற்பு வழக்கில் 03-ஆம் பிரதிவாதி ஆவார். 03-ஆம் மனுதாரர் முதலேற்பு வழக்கில் 04-ஆம் பிரதிவாதி ஆவார். 01-ஆம் மனுதாரருக்கு 02-ஆம் மனுதாரர் மகள் ஆவார். 03-ஆம் மனுதாரர் மனைவி ஆவார். முதலேற்பு வழக்கின் 02-ஆம் பிரதிவாதி 01-ஆம், 03-ஆம் மனுதாரரின் மற்றொரு மகள் ஆவார். 02-ஆம் பிரதிவாதி வெளிநாட்டில் உள்ளார். இந்த வழக்கில் தோன்றாத் தரப்பினராக உள்ளார்.

02. 01-ஆம் மனுதாரரின் தகப்பனார் சோமசுந்தரம் ஆவார். தாயார் ஜானகி அம்மாள் ஆவார். சோமசுந்தரத்திற்கும் ஜானகி அம்மாளுக்கும் 01-மனுதாரர் இளங்கோவனும் 01-ஆம் எதிர்மனுதாரர்/வாதியின் கணவரும் 02-ஆம் எதிர்மனுதாரர்/வாதியின் தகப்பனாருமான புகழேந்தியும் மகன்கள் ஆவர். மேலும் மணிமேகலை, கண்ணகி, மாணிக்கமணி மற்றும் மாதவி என்ற 04 மகள்களும் அவர்களுக்கு இருந்தனர்.

03. 15.03.1965-ஆம் தேதியன்று ஜானகி அம்மாள் பெயரில் சொத்து வாங்கப்பட்டது. 01-ஆம் மனுதாரர், சோமசுந்தரம், ஜானகி அம்மாள் ஆகியோர் மட்டும் பணம் கொடுத்து ஜானகி அம்மாள் பெயரில் வாங்கப்-பட்டது. 01-ஆம் மனுதாரரின் பெற்றோர் 01-ஆம் மனுதாரரின் சகோதரரான புகழேந்திக்கு தெரிந்து மேற்சொன்ன சொத்தை 01.01.1999 ஆம் தேதியன்று இரண்டு பாகமாக பிரித்தனர். ஒரு பாதி வடக்குப் பக்கத்திலும் மற்றொரு பாதி கிழக்கு பக்கத்திலும் பிரிக்கப்பட்டது. கிழக்குப் பக்கம் இருந்த பாதி 01-ஆம் மனுதாரரின் பாகமாக ஒதுக்கப்பட்டது. வடக்குப்

பக்கம் இருந்த பாகம் 01-ஆம் மனுதாரரின் பெற்றோர் பாகத்திற்கு ஒதுக்கப் -பட்டது. பின்னிட்டு 01-ஆம் மனுதாரரும் அவருடைய பெற்றோரும் அதாவது சோமசுந்தரமும் ஜானகி அம்மாளும் 05.03.1999-ஆம் தேதியன்று பாகப்பிரிவினை கூர்ச்சீட்டு ஒன்றை எழுதிக்கொண்டனர். அவரவருக்கு ஒதுக்கப்பட்டப் பாகத்தில் கட்டடம் கட்டுவதற்காகவும் நகராட்சி பதிவேடுகள் மற்றும் வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்வதற்காகவும் அந்த கூர்ச்சீட்டு எழுதப்பட்டது.

04. மனுதாரின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட தெற்கு பாதி நகர புல எண். 133/2-ஆகவும் 01-ஆம் மனுதாரரின் பெற்றோர் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட வடபகுதி பாதி நகர புல எண். 133/1-ஆகவும் உட்பிரிவு செய்யப் பட்டன. 01-ஆம் மனுதாரரின் சகோதரர் புகழேந்தி 2004-ஆம் ஆண்டு இறந்து -விட்டார்.

05. 01-ஆம் மனுதாரரின் பெற்றோரான சோமசுந்தரமும் ஜானகி அம்மாளும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நகர புல எண்.133/1-ல் அடங்கிய இடத்தைப் பொறுத்து எவ்வித பராதீனமும் செய்யாமல் விருப்பாவணம் எதுவும் எழுதிவைக்காமல் இறந்துவிட்டனர். 01-ஆம் மனுதாரரின் பெற்றோருக்கு ஒதுக்கப்பட்ட நகர புல எண்.133/1-ல் அடங்கிய இடம் 01 ஆம் மனுதாரருக்கும் அவருடைய சகோதரர் புகழேந்திக்கும் சகோதரிகள் மணிமேகலை, கண்ணகி, மாணிக்கமணி மற்றும் மாதவி ஆகியோருக்கும் வாரிசுரிமையில் வந்தடைந்துள்ளது. நகர புல எண்.133/1 ல் அடங்கிய இடத்தில் 01-ஆம் மனுதாரருக்கு 1/6 பாகம் உரிமையுடையது. அந்தப் பாகத்தை பொறுத்து 01-ஆம் மனுதாரர் தனது மனைவியான 03-ஆம்

மனுதாரர்/04-ஆம் பிரதிவாதிக்கு 07.06.2013-ஆம் தேதியன்று அறுதியாவண கொடை கொடுத்து ஆவணம் எழுதி வைத்துள்ளார். எஞ்சியுள்ள 4/6 பாகம் 01-ஆம் மனுதாரரின் 04 சகோதரிகளுக்கும் 1/6 பாகம் இறந்துபோன புகழேந்தியின் வாரிசுகளான எதிர்மனுதார்கள்/வாதிகளுக்கும் சொந்தம். ஆனால், நகர புல எண். 133/1 ல் அடங்கிய முழு இடத்திற்கும் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் உரிமை கோருகின்றனர். அது சம்மந்தமா உரிமைமூல ஆவணத்தைக் காட்டுமாறு 01-ஆம் மனுதாரர் கோரியும் அவர்கள் காட்டவில்லை.

06. நகர புல எண். 133/1-ல் அடங்கிய இடம் 01-ஆம், 02-ஆம் எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்குச் சொந்தம் என்றும் அதில் 01-ஆம் எதிர்மனுதாரருக்கு உள்ள 1/2 பாகத்தை 02-ஆம் எதிர்மனுதாரருக்கு விட்டுக் கொடுப்பதாகவும் 09.12.2014-ஆம் தேதியன்று விடுதலை ஆவணம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்த ஆவணம் நகர புல எண். 133/1-ல் எதிர்மனுதாரர்களுக்கு சொந்தமில்லாத 5/6 பாகத்தை அபகரிக்கும் நோக்கத்தோடு நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

07. 01-ஆம் மனுதாரர் 03-ஆம் மனுதாரர்/04-ஆம் பிரதிவாதிக்கு 07.06.2013-ஆம் தேதியன்று நிறைவேற்றிக் கொடுத்த 1/6 பாகத்திற்கு உரிமை கோரி அவர் சேலம் சார்பு நீதிமன்றத்தில் முதலேற்பு வழக்கு எண். 477/2015 வழக்கைக் தொடுத்தார். அந்த வழக்கு 01.09.2018-ஆம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டது. தீர்ப்பையும் தீர்ப்பாணையையும் எதிர்த்து 03-ஆம் மனுதாரர்/04-ஆம் பிரதிவாதி சேலம் மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண். 56/2019 வழக்கைத்

தொடுத்தார். அந்த மேல்முறையீடு 19.08.2020-ஆம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டது. மேல்முறையீட்டு வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பையும் தீர்ப்பாணையையும் எதிர்த்து 03-ஆம் மனுதாரர்/04-ஆம் பிரதிவாதி மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் 02-ஆம் மேல்முறையீட்டு வழக்கு எண். 48/2021 வழக்கைத் தொடுத்தார். அது நிலுவையில் இருந்து -வருகிறது.

08. முதலேற்பு வழக்கு எண். 477/2015 வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டதை எதிர்மனுதாரர்கள் அவர்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு அவர்களின் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் உதவியுடன் 18.02.2015-ஆம் தேதியன்றுக்குபின் 09.09.1995-ஆம் தேதியிட்ட விருப்பாவணம் அதாவது ஜானகி அம்மாள் நிறைவேற்றிக் கொடுத்தது போன்ற விருப்பாவணம் ஒன்றை பொய்யாக புனைந்துள்ளனர். அந்த விருப்பாவணத்தில் ஜானகி அம்மாள் 15.03.1965-ஆம் தேதியன்று வாங்கிய சொத்தைப் பொறுத்து 01-ஆம் மனுதாரருக்கும் இறந்துபோன புகழேந்திக்கும் சரிசமமாக சொத்தை கொடுப்பதாக எழுதி ஜானகி அம்மாள் கையொப்பம் இட்டதுபோன்று புனைந்துள்ளனர். ஜானகி அம்மாள் ஒருபோதும் விருப்பாவணத்தை நிறைவேற்றவோ கையெழுத்திடவோ இல்லை. கடந்த 28 ஆண்டுகளாக எதிர்மனுதாரர்கள்/வாதிகள் அந்த விருப்பாவணத்தை தாக்கல்செய்யவில்லை. முதலேற்பு வழக்கு எண். 477/2015 வழக்கில் அவர்கள் தாக்கல்செய்த எதிர்வழக்குரையுடனும் தாக்கல்செய்யவில்லை. மேலும் இந்த வழக்கிலும் அதை தாக்கல் செய்யவில்லை. அந்த விருப்பாவணத்தின் அடிப்படையில்தான் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் இந்த வழக்கைத் தாக்கல்செய்துள்ளனர்.

09. மேல்முறையீட்டு வழக்கு எண். 56/2019-ல் 09.09.1995-ஆம் தேதியிட்ட ஜானகி அம்மாளாள் நிறைவேற்றப்பட்டதாக சொல்லப்படும் விருப்பாவணம் உண்மையானதல்ல என்று மேல்முறையீட்டு நீதிமன்றம் முடிவு தெரிவித்திருக்கிறது. அந்த முடிவு எதிர்மனுதாரர்கள்/வாதிகளை கட்டுப்படுத்தும். அந்த முடிவை எதிர்த்து எதிர்மனுதாரர்கள்/வாதிகள் இந் நாள்வரை மேல்முறையீடு எதுவும் தாக்கல்செய்யவில்லை. மேல்முறையீடு செய்வதற்கான காலவரம்பும் முடிந்துவிட்டது. அந்த முடிவின் அடிப்படையில் 09.09.1995-ஆம் தேதியிட்ட விருப்பாவணம் என்று சொல்லப்படும் ஆவணத்தின் அடிப்படையில் எதிர்மனுதாரர்கள்/ வாதிகள் நகரபுல எண்.133/1-ல் அடங்கிய சொத்தின்மீது எவ்வித உரிமையும் கோர முடியாது. மேற்சொன்ன மேல்முறையீட்டு வழக்கில் இந்த வழக்குத் தொடுக்கப்பட்ட பிறகு முடிவு தெரிவிக்கப்பட்டிருந்தாலும் அந்த முடிவு எதிர்மனுதாரர்கள்/வாதிகளை கட்டுப்படுத்தும்.

10. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் நம்பும் இந்த வழக்கிற்கு அடிப்படையான விருப்பாவணம் மேற்சொன்ன மேல்முறையீட்டு வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பில் உண்மையானது அல்ல என்று முடிவு செய்யப் பட்டுள்ளதால் அதன் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு பயனற்றதாகும். இந்த வழக்குத் தொடர்ந்து நிலுவையில் இருப்பது மனுதாரர்களுக்கு ஈடுசெய்ய முடியாது இழப்பை ஏற்படுத்தும். மேலும் அநீதியையும் விளைவிக்கும். ஆகையால், முதலேற்பு வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**எதிருரையின் சுருக்கம்**

11. 15.03.1965-ஆம் தேதியன்று ஜானகி அம்மாள் பெயரில் வாங்கப்பட்டச் சொத்து பெயர் இரவலர் என்ற முறையில் வாங்கப்பட்ட-தாகவும் அந்தச் சொத்தை வாங்குவதற்கான பணத்தை 01-ஆம் மனுதாரரின் தகப்பனாரும் 01-ஆம் மனுதாரரும் ஜானகி அம்மாளும் கொடுத்ததாகவும் மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதி பொய். தரப்பினரிடையேயான உறவு முறைகள் பற்றி மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதி உண்மை.

12. 05.03.1999-ஆம் தேதியன்று பாகப்பிரிவினை கூர்ச்சீட்டு ஏற்பட்டதாக சொல்வது பொய். அவ்வாறான ஒரு கூர்ச்சீட்டு மோசடியாக 01-ஆம் மனுதாரரால் புனையப்பட்டிருக்கிறது. வழக்குரைஞரான 01-ஆம் மனுதாரர் அந்த ஆவணத்தை புனைந்துள்ளார்.

13. ஜானகி அம்மாள் வாங்கிய மேற்சொன்ன சொத்தைப் பொறுத்து ஒருபோதும் பாகப்பிரிவினை நடக்கவில்லை. ஜானகி அம்மாள் 09.09.1995 ஆம் தேதியன்று மேற்சொன்ன சொத்தைப் பொறுத்து 01-ஆம் எதிர்மனுதாரரின் கணவர் புகழேந்தி பெயரிலும் 01-ஆம் மனுதாரர் இளங்கோவன் பெயரிலும் விருப்பாவணம் எழுதிவைத்தார். மேல்-முறையீட்டு வழக்கு எண்.56/2019 வழக்கில் அந்த விருப்பாவணம் உண்மையில்லை என்று மேல்முறையீட்டு நீதிமன்றம் முடிவு தெரிவித்திருக்-கிறது என்று மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதி பொய். அந்தச் சங்கதி நீதிமன்றத்தை திசைத்திருப்பும் நோக்கத்தில் மனுதாரரால் சொல்லப்-பட்டுள்ளது. முதலேற்பு வழக்கு எண். 477/2015 வழக்கில் விருப்பாவணம்

தாக்கல்செய்யப்படவில்லை என்பதால் மட்டுமே அந்த வழக்கில் அல்லது மேல்முறையீட்டில் அந்த விருப்பாவணத்திற்கு எதிராக முடிவு தெரிவிக்கப் பட்டதாக சொல்ல முடியாது. அத்தகைய முடிவு எதுவும் அந்த தீர்ப்புரையில் தெரிவிக்கப்படவில்லை. மேல்முறையீட்டு வழக்கு எண். 56/2019 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு அதாவது விருப்பாவணம் சம்மந்தமாக தெரிவிக்கப் -பட்டதாக சொல்லப்படும் கருத்து எதிர்மனுதாரர்கள்/வாதிகளை கட்டுப்படுத்தும் என்று சொல்வது பொய். மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வழக்கு விசாரணையை சந்திக்காமல் பல்வேறு மனுக்களை தாக்கல்செய்து காலதாமதபடுத்திவருகின்றனர்.

14. 03-ஆம் மனுதாரர் வழக்கு விசாரணையை நடத்தவிடாமல் பல்வேறு இடையூறுகள் செய்கிறார். மனுதாரர்கள் வழக்குரையை நிராகரிக்கக் கோரி உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 07-ஆம் வகுமுறையின் 11-ஆம் விதியின்கீழ் மனு தாக்கல் செய்திருந்தனர். அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த ஆணையை எதிர்த்து அவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல்செய்த சீராய்வு மனு CRP.No.1864/2019 தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த மனுவில் சொல்லப்பட்டுள்ள அதே காரணங்களுக்காக மனுதாரர்கள் உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 151-ஆம் பிரிவின்கீழ் எவ்வித முகாந்திரமின்றி இந்த மனுவை தாக்கல்செய்துள்ளனர். எதிர்மனுதாரர்கள்/ வாதிகளை துன்புறுத்த மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல்செய்துள்ளனர். வழக்கு விசாரணையை எதிர்கொள்ளாமல் இதுபோன்ற குறுக்கு வழிகளில் மனுதாரர்கள் ஈடுபட்டுவருகின்றன. இந்த மனு நிலைநிற்கத்தக்கதல்ல. ஆகையால், இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்**

15. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?

**தீர்முடிவு**

16. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. மனுவின் சுருக்கத்திலும் எதிருரையின் சுருக்கத்திலும் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள்தான் ஏறக்குறைய வழக்குரையிலும் எதிர்வழக்குரையிலும் சொல்லப்பட்டுள்ளன. ஆகையால், அவைகள் குறித்து மீண்டும் இங்கு குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை என்று நீதிமன்றம் கருதுகிறது.

17. வழக்கைத் தள்ளுபடி செய்ய வேண்டு மென்று உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 151-ஆம் பிரிவின்கீழ் மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல்செய்துள்ளனர். ஓர் உரிமை வழக்கை விசாரணைக்கு -முன் நிராகரிப்பதற்கான அதிகாரத்தை உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 07-ஆம் வகுமுறையின் 11-ஆம் விதியை தவிர வேறெந்த வகையமும் உரிமையியல் நீதிமன்றங்களுக்கு அளிக்கவில்லை. உரிமையியல் நீதிமன்றங்கள் முன்னெடுக்கும் ஒரு நடவடிக்கையை நேர்மறையாக முனெடுத்து செல்வதற்கு உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தில் குறிப்பாக வகையம் எதுவும் இல்லாத நிலையில் 151 ஆம் பிரிவு உரிமையியல் நீதிமன்றங்களுக்கு உள்ளார்ந்த அதிகாரம் அளிக்கிறது. ஓர் உரிமை வழக்குத் தள்ளுபடி செய்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கான அதிகாரத்தை உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 151-ஆம் பிரிவு வழங்கவில்லை. ஆகையால், வழக்கைத்

தள்ளுபடி செய்யக் கோரி உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 151-ஆம் பிரிவின்கீழ் தாக்கல்செய்யப்பட்டுள்ள இந்த மனு நிலைநிற்கத் -தக்கதல்ல என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

18. இந்த இடத்தில் மாண்பமை உச்சநீதிமன்றம் **Vinod Seth –vs– Devinder Bajaj & Anr in 2010–5–L.W.124** என்ற வழக்கில் வகுத்துள்ள முன் தீர்ப்பு நெறியை இங்கு குறிப்பிடுவது உகந்ததாக இருக்கும் அது பின்வருமாறு

> ***"Para:13– As the provisions of the Code are not exhaustive, section 151 is intended to apply where the Code does not cover any particular prodecural aspect, and interests of justice require the exercise of power to cover a particular situation. Section 151 is not a provision of law conferring power to grant any kind of substantive relief. It is a procedural provision saving the inherent powr of the court to make such orders as may be necessary for the ends of justice and to prevent abuse of the process of the court. It cannot be invoked with reference to a matter which is covered by a specific provision in the Code. It cannot be exercised in conflict with the general scheme and intent of the Code. It cannot be used either to create or recognize rights, or to create liabilities and obligations not contemplated by any law."***

19. மேலே முடிவுசெய்யப்பட்டது ஒருபுறம் இருக்கட்டும். வழக்குரையை நிராகரிக்கக் கோரி இதே மனுதாரர்கள் உரிமையியல்

நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 07-ஆம் வகுமுறையின் 11-ஆம் விதியின்கீழ் வழக்கிடை விண்ணப்ப எண்.527/2018-ஐ தாக்கல் செய்திருக் -கின்றனர். அந்த மனு 10.04.2019-ஆம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட் டிருக்கிறது. அந்த ஆணையை எதிர்த்து மனுதாரர்கள் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல்செய்த சீராய்வு மனு (CRP.No.1864/2019) 08.02.2023-ஆம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கனவே தாக்கல்செய்யப்பட்ட வழக்கிடை விண்ணப்ப எண்.527/2018 மனுவில் என்ன சங்கதிகள், காரணங்கள் சொல்லப்பட்டுள்ளனவோ அதேச் சங்கதிகளும் காரணங்களும்தான் இந்த மனுவிலும் சொல்லப்பட்டுள்ளன. இந்த மனுவில் கண்டுள்ள அதே காரணங்களுக்காக ஏற்கனவே தாக்கல்செய்யப்பட்ட வழக்கிடை விண்ணப்ப எண்.527/2018 தள்ளுபடி செய்யப்பட்டு அந்த ஆணை மாண்பமை உயர் நீதிமன்றத்தில் உறுதிசெய்யப்பட்ட நிலையில் மனுதாரர்கள் மீண்டும் அதே காரணத்திற்காக இந்த மனுவை தாக்கல்செய்திருப்பது மனுதாரர்கள் நீதிமுறை நடவடிக்கைகளை தவறாக பயன்படுத்துகிறார்கள் என்பதை வெளிப்படையாக காட்டுகிறது. நீதிமன்ற நேரத்தை வீணடிக்கும் மனுதாரர்களின் செயலை இந் நீதிமன்றம் கண்டிக்கிறது. எதை நேரடியாக செய்ய முடியாதோ அதை மறைமுகமாகவும் செய்ய முடியாது.

20. உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 07-ஆம் வகுமுறையின் 11-ஆம் விதியின்கீழ் தாக்கல்செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் அதே காரணங்களுக்காக இந்த மனுவை மனுதாரர்கள் தாக்கல்செய்திருப்பதால் உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 35A-ஆம் பிரிவின்கீழ் 15,000/- உரூபாயை ஈடு

செய்யும் செலவுத் தொகையாக மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு செலுத்த வேண்டும் என்று ஆணையிட்டு இம் மனுவை இந் நீதிமன்றம் தள்ளுபடி செய்கிறது.

**இறுதிமுடிவு**

21. இறுதியாக, இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 35A-ஆம் பிரிவின்கீழ் இந்த மனுமீதான நடவடிக்கையில் ஈடுகட்டும் செலவுத் தொகையாக 15,000/- உருபாயை எதிர்மனுதாரர்களுக்கு மனுதாரர்கள் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும் என்று ஆணையிடப்படுகிறது.

**இந்த ஆணையுரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 25–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

**(ஒப்பம்) வே.புகழேந்தி,**
**மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

**இணைப்பு:–** இல்லை

உண்மை/வரைவு ஆணையுரை

இ.ம.எண்.01/2023 in மு.வ.எண்.257/2018

நாள் 25.07.2025